திரு. பெ. வாசுதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் செய்யூர் மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் இல்லை; அங்கே டிரைவர் இல்லை என்று சொன்னார்கள். ஆம்புலன்சும் இல்லை. அங்கே காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையிலே ஆம்புலன்ஸ் இருப்பதாக அறிகிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆம்புலன்ஸ் வழங்கினால் எங்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்ற மக்களுக்கு இலகுவாக இருக்கும் — ஆகவே அந்த ஆம்புலன்ஸைப் பெற்றுத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாகக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

75—

அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லம்

***16545—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

3 - ஜூலை 2007

2004 ஜூலை 29]

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் எத்தனை அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினர் மகளிர் காப்பகங்கள் என்பது; பாலியல் தொழிலில், பரத்தமைத் தொழிலில் ஈடுபடும் பெண்கள், குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவும், தனியார் தொண்டு நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிப்பதற்காகவும், நீதிமன்றத்திலே தண்டனை வழங்கப்படுகின்ற காலத்தில், அந்தக் குறுகிய காலத்திலே தங்க வைப்பதற்குரிய இடங்கள்தான் அரசினர் மகளிர் காப்பகங்கள் என்பவை. 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் என்கிற தடுப்புச் சட்டத்தின்கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கென அமைக்கப்பட்டவை பாதுகாப்பு இல்லங்கள். மகளிரும், சிறுவர்களும் தண்டனை பெற்று சிறைச்சாலைகளில் அடைக்கப்படுகின்ற காலம் வரை தற்காலிகமாக, அந்தக் குறுகிய காலத்திலே, தங்க வைக்கப்படக்கூடிய இடங்கள் இந்த மகளிர் காப்பகங்கள் என்பவை. இது நெல்லை மாவட்டத்திலே இல்லை. சென்னையிலே இரண்டு இடங்களிலும், மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இந்த இடங்களிலே மட்டும்தான் இந்தக் காப்பகங்கள் இப்போது அரசின் சார்பிலே நடத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற குற்றங்களில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுடைய பழக்கவழக்கங்கள் பற்றி அந்த மாவட்டத்திலேயிருந்து குற்றச்சாட்டுகளாக அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படி அதிகமாகக் குற்றங்கள் இழைக்கப்படுகின்ற சூழ்நிலைகள் உருவாக்கப்படுமேயானால் அவற்றைத் தடுப்பதற்குரிய வழிகளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொண்டு நிறுவனங்களோடு சேர்ந்து எடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76,. திரு. ராதாரவி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.